## தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டின் பந்திக்கான தொடர்பு | பரிந்துரைகள் | மீளாய்வாண்டின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(இ) | திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 1.6.1(ஆ)(i) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) மூலதனச் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்றில் 02 வகையான மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு கூட்டுமொத்தம் ரூபா 5,497,585 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரி புத்தகத்தில் (SA – 82) அவை கூட்டுமொத்தம் ரூபா 2,800,845 எனக் காட்டப்பட்டிருப்பதனால் கூட்டுமொத்தம் ரூபா 2,696,740 வேறுபாடு காணப்பட்டது. | இணையப் பதிவேற்றத்தினால் (Web Interface) ஏற்பட்டிருந்த இத் தவறினை சீராக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | வேறுபாடு இனங்காணப்பட்டு சீராக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் |

## (ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நேர்முன்னைய ஆண்டு இறுதியிலிருந்தவாறான நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி கூட்டு மொத்தம் ரூபா 1,270,479,547 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிகூற்றுக்களில் ஆரம்ப மீதி கூட்டுமொத்தம் ரூபா 1,355,692,400 ஆக காணப்பட்டதால் ரூபா 85,212,853 வேறுபாடு காணப்பட்டது. | New web cigas assests management இற்கு Email ஊடாக திருத்திக் கொள்வதற்குரிய கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. | வேறுபாடு நிவர்த்தி செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் |
| (ii) | மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் கூட்டு மொத்தம் ரூபா 1,432,058,050 ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் கூட்டுமொத்தம் ரூபா 1,454,597,866 ஆகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்கள் கூட்டு மொத்தம் ரூபா 22,539,816 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இத் தொகையினை நிதி நிலைமைக் கூற்றில் வெளிக்காட்டுவதற்கு எதிர்வரும் காலங்களில் நிதி நிலமைக் கூற்றின் அமைப்பு (format) மாற்றப்படும் சந்தர்ப்பதில் இவ் வேறுபாடானது தவிர்க்கப்படும். | நிதியல்லா சொத்துக்களின் சரியான கூட்டுமொத்தப் பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## (இ) கட்டுநிதி மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் யூலை 04 அன்று மாவட்டச் செயலகத்தால் திறைசேரிக்குத் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த கட்டுநிதி மீதி ரூபா 27,158,000 மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் தீர்க்கப்படாத பணி முற்பணக் கணக்கு மீதியாகவும் காசும் காசுக்கு சமனானவையாகவும் தவறாகக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் முற்றாக தவிர்க்கப்படும். | தீர்க்கப்பட்ட பணி முற்பணங்களை சரிவர கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து இத் தவறு சீராக்கப்படுதல் வேண்டும் |

(ஈ) கணக்காய்விற்குப் போதிய எழுத்துருவிலான சான்றுகளின்மை

| அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ''பசுமையானதொரு தேசம்'' தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைப் புரட்சி மற்றும் தொடர்புடைய அபிவிருத்தி திட்டங்களுக்காக கூட்டுமொத்தம் ரூபா 200.8 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அனுமதிக்கப்பட்ட பயனாளிகள் தெரிவு விண்ணப்பங்கள், தெரிவு அடிப்படைகள், பயிர்களின் முளைதிறன் பரீட்சிப்பு அறிக்கை, கிராமிய, பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலான செயற்றிட்ட முன்னேற்ற அறிக்கைகள், பயிர் அறுவடை அல்லது விளைவுகள், பயிர்ச்செய்கை மூலம் எதிர்பார்க்கப்பட்ட அடைவு மதிப்பீடு மற்றும் 139 அரச நிறுவன அலகுகளுக்கு வழங்கப்பட்டிருந்த விவசாய உபகரணங்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை என்பன நாளதுவரை கணக்காய்வுக்கு கிடைத்திருக்காமையால் அவற்றினைக் கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுப் பரீட்சித்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தொடர்புடைய சகல ஆவணங்களும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## (உ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணஙகாத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | | |
| | | **ரூபா** | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br><br>நிதிப்பிரமாணம் 571 | 2,632,447 | மாவட்டச் செயலகத்தினால் குறித்த நோக்கங்களுக்கு உபயோகிக்கப்பட்டிராத மற்றும் காலங் கடந்த நிலையிலுள்ள 32 வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது கடந்த 02 தொடக்கம் 04 ஆண்டுகளாக பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி கிடைக்கப் பெற்றதும் நடவடிக்கை எடுக்கப்படும் | வைப்புக்கள் குறித்த நோக்கங்களுக்கு உபயோகிக்கப்பட்டிருத்தலையும் காலங்கடந்த வைப்புக்களினை உரியவாறு நடவடிக்கைக்குட்படுத்துவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 4 | 122,391 | பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இரு உத்தியோகத்தர்களின் இடர்கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 144,335 இனை அறவிட்டுக் கொள்வதற்கு கடந்த 05 வருடங்களுக்கு மேலாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படுதல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு 04 அபிவிருத்தித் திட்ட விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிர்வாக செலவின வகுதிக்குரிய நிதி ஒதுக்கீடுகளிலிருந்து அத் திட்டங்களுடன் தொடர்புபட்டிருக்காத கடமைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு மேலதிகநேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் கூட்டுமொத்தம் ரூபா 836,346 செலுத்தப்பட்டிருந்த 25 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பொருத்தமான பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒதுக்கீடுகளுடன் தொடர்புபட்ட கடமைகளுக்குரிய நிர்வாக செலவினங்கள் மாத்திரம் செலுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் |

### 2.2 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்காக மாவட்டச் செயலகத்தினால் உடன்படிக்கைகள் எதுவுமின்றி நெற்கொள்வனவுக்கென இரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த நெல் கொள்வனவுக்கான முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 20,729,785 இல் கூட்டுமொத்தம் ரூபா 17,634,125 அல்லது 85 சதவீதம் நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | முற்பணங்களை அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 04 பிரதேச செயலகங்களினால் கூட்டுமொத்தம் ரூபா 183.9 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்த 118 வீடுகள் கடந்த 06 தொடக்கம் 10 ஆண்டுகளாக குடியிருப்பாளர்களால் உபயோகிக்கப்பட்டிருக்காது பாழடைந்திருந்தது. | பொருளாதார, கல்வி மற்றும் மருத்துவ காரணங்களினால் வேறு பிரதேசங்களுக்குச் சென்று வாழ்வதனால் இவற்றை உபயோகப்படுத்த முடியாதிருந்தது. | அவ் வீடுகள் தொடர்ந்தும் பயன்மிக்க வகையில் உபயோகிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்டிருந்த நிதியிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 24.19 மில்லியன் கிரயத்தில் மாவட்டச் செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டு செல்வபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டு 481 இருப்புப் பொருட்களுடன் வசதிப்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பற்ற மற்றும் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு நிலையமானது கடந்த 08 ஆண்டுகளாக குறித்த திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்பட்டிருக்காது பயன்பாடின்றிக் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்கு பொருத்தமான கருத்துரை வழங்கப்படவில்லை. | குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 ஆம் ஆண்டில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் சப்ரிகம செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1.48 மில்லியன் பெறுமதியான எண்ணெய் உற்பத்தி இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான உயரழுத்த மின்னிணைப்பு வசதிப்படுத்தப்பட்டிராத திருமுறிகண்டி கிராம அபிவிருத்தி அமைப்புக்கு வழங்கப்பட்டமையால் குறித்த இயந்திரங்கள் உரிய நோக்கத்திற்கு நாளதுவரை பயன்படுத்தப்படாது பழுதடையும் நிலையில் காணப்பட்டன. | மின்சார இணைப்பு வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவு செய்யப்பட்டிருந்த நோக்கத்துக்கு பயன்படுத்தப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகத்துக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கியொன்று 06 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதுள்ளதுடன் 2016 திசெம்பரில் ரூபா 9.8 மில்லியனுக்கு மாவட்டச் செயலகத்தின் பிரதான மின்துண்டிப்பு வேளைகளில் மாத்திரம் உபயோகிக்கப்படுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 502 கிலோவாற்று (502KW) மின்வலுவுடைய வேறொரு மின்பிறப்பாக்கியானது 385 இயந்திர மணித்தியாலங்கள் தொழிற்பட்ட பின்னர் செயற்பாடற்றிருதிருந்தது. | ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும். | திருத்தம் செய்யப்பட்டு பயன்மிக்க வகையில் உபயோகப்படுத்தப்பட்டுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |
| (ஆ) | மாவட்டச் செயலகம் மற்றும் துணுக்காய், புதுக்குடியிருப்பு, வெலிஓயா, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களினால் பயன்படுத்தப்பட்டு வந்த 13 வாகனங்கள் உரித்தற்ற நிலையில் உபயோகிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவற்றினை மாவட்டச் | உரிமை மாற்றம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | வாகனங்களை உடமைப்படுத்தப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செயலகத்திற்குரித்தாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் நலிவடைந்திருந்தன. | | |
| (இ) | மாவட்டச் செயலகம், புதுக்குடியிருப்பு மற்றும் துணுக்காய் ஆகிய பிரதேச செயலகங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்த 15 வாகனங்கள் 03 ஆண்டுகளுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் விடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவற்றினை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவற்றினை திருத்தம் செய்து பயன்மிக்க வகையில் உபயோகப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2019 செப்தெம்பர் 10 அன்று முள்ளியவளையிலுள்ள உலக உணவுத் திட்டத்திற்கான சளஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 02 லொறிகள் மீளாய்வாண்டில் பௌதீக செவ்வை பார்த்தலுக்குக் கிடைத்திருக்கவில்லை. | கருத்துரைக்கப்பட்டிருக்கவில்லை | தொடர்புடைய ஆவணங்கள், பதிவேடுகளுடன் பௌதீக செவ்வை பார்த்தலுக்குட்படுத்தப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 2022 மார்ச் 16 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 04/2020 இன் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களின் பிணைப்பணம் செலுத்தப்பட வேண்டிய 27 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டிய பிணைப்பணம் கூட்டுமொத்தம் ரூபா 294,000 நாளதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. | பிணைப்பணம் பெறப்படுவதற்கு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பிணைப்பணம் பெறப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களுக்கு உரித்துடையதென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வந்த காணிகளுக்குரிய உறுதிப்பத்திரம்/ காணி சுவீகரித்தல் கட்டளை (Vesting Order) மற்றும் நிலஅளவை வரைபடங்கள் என்பன கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக கணக்காய்வுக்குக் கிடைத்திருக்காத போதிலும் அவற்றினை பெற்றுக்கொண்டு நியாயமான பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்க நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான செயற்பாடுகள் விரைவில் தொடங்கப்படும் | உடமையையும் காணி விஸ்தீரணங்களையும் உறுதிப்படுத்திப் பெற்றுக் கொண்டு அவற்றின் நியாயமான பெறுமதியினை அரச விலை மதிப்பீட்டாளர் மூலமாக மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் |

## 4. மனித வள முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் மாவட்டச் செயலகம் மற்றும் அதன் பிரதேச செயலகங்களின் பல்வேறுபட்ட ஆளணியினர் வகுதிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 702 பதவியணியினரில் 120 பதவியணியினருக்கு தொடர்ந்தும் வெற்றிடமாக காணப்பட்டது. | ஆட்சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காகச் செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 05 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இணங்காணப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. | அக் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு வருடாந்தம் அடைவு மட்டங்கள் மதிப்பிடப்பட்டு 2023 ஆம் ஆண்டளவில் அக் குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்படுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |